Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ மே ௴ 30௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 11

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

சென்றவாரம், ஒரு சிறிய பிரிட்டிஷ் விமான வெடிகுண்டு படை, ஜெர்மன் கடற்படைத் தளமான ஹெலிகோலாந்தைத் திடீரென்று வெற்றிகரமாகத் தாக்கியது. அப்போது கால்பந்து பந்தயப் போட்டி ('புட்பால் மேட்ச்') ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கியபோது, ஜெர்மன் விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுட ஆரம்பித்தன. சுட்டுக்கொண்டிருக்கும்போது, விமானங்கள் கீழே பாய்ந்து வெடிகுண்டுகளைப் போட்டன 40 அல்லது 50 அடி உயரம் பறந்து, நான்கு பீரங்கிகள் வைத்திருந்த இடத்தை நேரே தாக்கும்படியாக வெடிகுண்டுகள் போடப்பட்டன. ஹெலிகோலாந்தின் தென் பாகத்திலுள்ள கப்பல் கட்டும் சாலைகளும், பட்டணத்தின் மத்திய பாகமும், வெடிகுண்டுகளால் பலமாகத் தாக்கப்பட்டன. தாக்குதலுக்குப் பிறகு, தாக்கப்பட்ட இடம் ஒரே புகையும், நெருப்பும், தூசுமாய் இருந்தது. ஒரு வாரத்துக்குமுன் தாக்கப்பட்டுச் சேதமடைந்த இடங்கள் நன்றாய்த் தெரிந்தன.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள பிரான்சுதேசம் பிரிட்டிஷ் விமானப் படையால் தாக்கப்பட்டது. பெதூன் என்ற இடத்துக்கருகிலுள்ள ஒரு மின்சாரச் சாலையும், ஒரு எண்ணெய் சுத்தம் செய்யும் சாலையும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. பகைவர்களுடைய விமானங்கள் பிரிட்டிஷ் விமானங்களைத் துரத்திச் சண்டையிட்டன. இருந்தபோதிலும், அந்த இரண்டு குறிகளின் மேல் நேராக வெடிகுண்டுகள் தாக்கியது புலப்பட்டது. எதிரிகளின் விமானங்களில் 6, பிரிட்டிஷ் விமானங்களால் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஒரு பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானமும், 6 பிரிட்டிஷ் போர்புரியும் விமானங்களும் திரும்பி வரவில்லை.

மேற்கு ஜெர்மனியில் கலோன் என்ற பட்டணம் தாக்கப்பட்டது. தொழிற்சாலைகளடங்கிய இந்தப் பட்டணம் இரண்டுதடவை வெற்றிகரமாகத் தாக்கப்பட்டது. கீல் பட்டணத்திலுள்ள கப்பற்கட்டும் சாலைகள், எம்டன் துறைமுகப்பட்டணம், பலோன், ராட்டர்டம், சேர்போர்க் முதலிய இடங்களிலுள்ள கப்பற்சாலைகள் ஆகிய இவைகளின் மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. நார்வேயின் கரையோரத்திலுள்ள எதிரிகளின் கப்பல்களும் தாக்கப்பட்டன; இதில் 2,500 டன் 'சப்ளை' கப்பல் ஒன்று முழுகடிக்கப்பட்டது; ஒன்று சேதப்படுத்தப்பட்டது.

ஹாலந்து கரையோரத்தில் ஒரு வர்த்தகக் கப்பல் மேல் பிரிட்டிஷ் வெடிகுண்டு விழுந்து, நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்தது. பிரான்சின் மேற்குக் கரையோரத்தில், 'டாங்கர்' என்ற வகுப்பைச் சேர்ந்த ஒரு கப்பல் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளில், பல ஆகாய விமானச்சாலைகளும், கப்பற்சாலைகளும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

ந சத்திர வெளிச்சங்கொண்ட ஆகாயத்தில் பறந்துசென்று, பிரிட்டிஷ் விமானங்கள் பிரெஞ்சு தேசத்திலுள்ள பலோன் என்ற கடற்கரைப் பட்டணத்தைத் தாக்கின. வெடிகுண்டுகள் வெடித்ததால் உண்டான வெளிச்சம் ஆகாயத்தையே பிரகாசிக்கும்படி செய்தது; ஆனால் வெடித்த சப்தம் தென் மேற்குக் காற்றோட்டத்தில் சரியாகக் கேட்கவில்லை. அநேக வெடிகுண்டுகள் வெடித்த வெளிச்சத்திலும், அநேக தூரதிருஷ்டி ஆராய்ச்சி விளக்குகளின் வெளிச்சத்திலும், கீழே ஜெர்மன் விமானத் தரைப்படை மிக சுறுசுறுப்பாக பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதலைத் தடுக்க முயற்சித்தது நன்றாகத் தெரிந்தது.

சென்றவாரம், மத்தியக் கிழக்கரங்கப் பிரதேசம், கிரீசிலிருந்து தெற்கு இராக் வரை, சிரிநெய்கா பிரதேசம், முதலிய இடங்களைப் பிரிட்டிஷ் விமானங்கள் நன்றாகத் தாக்கின. எதிரிகளின் விமானங்களில் 50 சுட்டு வீழ்த்தப்பட்டன. மே ௴ 22-ந் தேதி விடியற் காலைவரை முடிந்த ஒரு வாரத்தில், சுட்டு வீழ்த்தப்பட்ட எதிரி விமானங்களின் கணக்கு பின் வருமாறு:—கிரீசில் 17, கிரீட்டில் 32, லிபியாவில் 11, சூயஸ்ஸில் 3, இராக்கிலும் சிரியாவிலும் 8. கிரீட் படையெடுப்பு ஆரம்பித்ததன் பிறகு இன்னும் அநேக ஜெர்மன் விமானங்கள் சேதப்படுத்தப்பட்டன. பிரிட்டனுக்கு ஒரு வார நஷ்டம் 22 விமானங்கள்தான்.

தென்னாப்பிரிக்காவில், ஓமோ நதிக் கருகாமையில், தென்னாப்பிரிக்கா விமானப்படை வெடிகுண்டுகளைப் போட்டது. எதிரிகளுடைய பாதுகாப்புத் தளங்களும், மோட்டார் போக்குவரத்து சாதனப் படையும் தாக்கப்பட்டன. பல மோட்டார் வண்டிகள் அடியோடு நாசமாய்விட்டன. பாலங்கள் மேலும், படகுகள் மேலும் சில வெடி குண்டுகள் விழுந்தன.

சென்ற வாரம் பிரிட்டன் மேல் ஜெர்மன் விமானங்கள் அதிகமாகத் தாக்கவில்லை. அதற்குக் காரணம் கால நிலை ஜெர்மன் விமானங்களுக்குச் சௌகரியமாயில்லை என்பதுதான்.

லண்டனில் சில நாள்களாக ஜெர்மன் விமானங்கள் வெடி குண்டுகள் போடுவதில்லை. சென்ற ஞாயிற்றுக்கிழமை இப்படிப் போடாதது 15-வது நாள் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பிரிட்டனின் வட கிழக்குக் கரை யோரத்தில் சில வெடி குண்டுகள் போடப்பட்டன. கிழக்குக் கரையில் உள்ள ஒரு பட்டணத்தின் மேல் போட்ட வெடி குண்டு கொஞ்சம் சேதம் ஏற்படுத்தியது; சிலர் உயிர் துறந்தார்கள்.

டோவர் பலூன் பராச்சைத் தாக்க, இரண்டு புதிய மாதிரி ஜெர்மன் விமானங்கள் வந்தன. அவைகளினுடைய சிறகுகள் சதுரமாக வெட்டப்படாமல், கூர்மையாக வெட்டப்பட்டு, ஹரிகேன் விமானங்களிலிருப்பது போல் வளைவாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு மெசர் ஸ்கிமிட் 109 F. விமானங்கள் என்று பெயர்.

### 2. ஆப்பிரிக்காவும், மத்திய தரைக்கடலும்.

சென்றவாரம், கிழக்கு மத்தியதரைக் கடலில், கிரீட் என்ற பெருந்தீவில் அச்சுத் துருப்புகளுக்கும், நேச தேசத்தார்களுக்கும் கடும் போர் நடந்தது. வார முதலில் நடந்த விஷயங்களைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் விவரமாக கூறினார். அவர் கூறியதன் சுருக்கமாவது:—ஜெர்மானியர் தங்கள் துருப்புகளைப் பெருவாரியாகத் தியாகம் செய்து, சில வெற்றிகள் அடைந்தார்கள். கிரீட்டை நோக்கிச் சென்ற ஒரு எதிரிக் கப்பல் கூட்டத்தைப் பிரிட்டிஷ் கப்பற் படை தாக்கியது. பல படகுகளும் அவைகளுக்குக் காவலாகச் சென்ற ஒரு நாசகாரியும் முழுகடிக்கப்பட்டன. கிரீட்டுக் கருகே கூட்டமாகச் சென்ற 30 எதிரிக் கப்பல்கள், பிரிட்டிஷ் கடற் படையைப் பார்த்ததும் உடனே திரும்பிவிட்டன. கடல் மூலமாகத் துருப்புகளைக் கொண்டு போக எதிரிகள் செய்த முயற்சி பயன்படவில்லை.

ஜெர்மன் துருப்புகள், விமானங்கள் மூலமாக, "பாரஷூட்" என்ற விமானக் குடையின் உதவி கொண்டு, கிரீட் தீவில் இறங்கின. தாற்காலிகமாக, ஹெராகிளியன், ரேதிமோ என்ற இடங்களில் இருந்து கொண்டு போர் புரிந்தன. ஆனால் கடுமையான யுத்தத்திற்குப் பிறகு, ஜெர்மன் துருப்புகளில் ஒரு பகுதியினர் சிறைப்படுத்தப்பட்டனர். ஹெராகிளியின் பிரதேசத்திலிருந்து, ஜெர்மானியர்கள் விரட்டப்பட்டார்கள். மாலெமி என்ற இடத்திற் கருகில் கோரமான போர் நடந்தது. ஜெர்மானியத் துருப்புகளுக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டது. நியூஜிலாந்தியர்களும், பிரிட்டிஷ் ஆகாய விமானிகளும் எதிர்த்துப் போராடி, ஜெர்மன் விமானங்கள் பலவற்றைச் சுட்டு வீழ்த்தினார்கள்.

கிரேக்க அரசரும், கிரேக்க அரசாங்கத்தினரும், கிரீட்டில் இருந்தால், ராணுவ அசௌகரியங்கள் ஏற்படும் என்று கருதி எகிப்துக்குப் போய்விட்டார்கள். ஆனால் உள் நாட்டு சமாசாரம், தொழில், யுத்தம், விமானப்படை, இவைகள் சம்பந்தப்பட்ட கிரேக்க மந்திரிகள் யுத்த சம்பந்தமான விஷயங்களைக் கவனிப்பதற்காக. கிரீட்டிலேயே இருக்கிறார்கள். கிரேக்க அரசாங்கத்தாரும், தானும் கிரீட்டைவிட்டுப் போகவேண்டிய காரணங்களை விளக்கி கிரேக்க அரசர் நீண்டதோர் அறிக்கைவிட்டிருக்கிறார். தாங்கள் யாதொரு தீங்குமில்லாமல் சௌக்கியமாய்ப் போய்ச்சேருவதற்குச் செய்த உதவிக்காக, நியூஜிலாந்து துருப்புகளுக்கு கிரேக்க அரசர் தம்முடைய நன்றியறிதலைத் தெரிவித்திருக்கிறார்.

கிரீட்டுக்கு அருகில்நடந்த கடல் யுத்தத்தில், 6 பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. கானியா பிரதேசத்தை எதிரிகள் தாக்கினார்கள். பிரிட்டிஷ் துருப்புகள் வேறு இடங்களுக்குச்சென்று, சண்டையிட்டுவருகின்றன. பிரிட்டிஷ் துருப்புகளுக்கு உதவிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஜெர்மானியத்துருப்புகளுக்கு ஆகாய விமானங்கள் மூலமாக உதவி வந்துகொண்டிருக்கிறது. ஜெர்மானியர்களுடைய சப்பல்கள் நான்கு முழுகடிக்கப்பட்டன.

அபிசீனியாவில் எதிரிகளின் இரண்டு படைகள் பிடிக்கப்பட்டு, அநேக ஆயிரக்கணக்கான எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள். காந்தார் பிரதேசத்தில் நடந்த சண்டையில், 100 இத்தாலியர்கள் உயிரிழந்தார்கள் ; 600 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். 32 பீரங்கிகளும், 14 'டாங்க்'கிகளும் பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது.

அபிசீனியாவில் சிதரடிக்கப்பட்டு பல இடங்களில் உள்ள இத்தாலியர்கள் துரத்தப்பட்டு பிடிக்கப்பட்டார்கள்.

### 3. அமெரிக்காவும் அட்லாண்டிக் கடலும்.

மேற்கிந்திய தீவுகளில் பிரான்சுக்குச் சேர்ந்த மார்தினீக் என்ற தீவை அமெரிக்கா தாக்காதென்று, அமெரிக்கா உள்நாட்டு மந்திரி, மிஸ்டர் காடெல் ஹல் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். ஐரோப்பாவில், பிரான்சும், ஜெர்மனியும் தீவிரமாக ஒத்துழைத்துக்கொண்டிருந்தாலும், மார்தினீக்கைப் பொறுத்தவரையில் நிலைமை ஒன்றும் மாறவில்லை என்று சொன்னார். ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள பிரான்சில் பொய்ப் பிரசாரம் நடந்துவருகிறதென்றும், அமெரிக்காவைத் தாக்குவதற்கு மார்தினீக்கிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவு வந்திருக்கிறதென்ற ஜெர்மன் செய்தி ஆதாரமற்றதென்றும், மிஸ்டர் ஹல் விளக்கிக் கூறினார்.

முக்கியமான ராணுவ சம்பந்தமுள்ள தூதுகோஷ்டிகளுக்காக, பிரத்தியேகமான படைகள் ஏற்படுத்துவதென்றும், அவைகளுக்காகக் கணக்கில்லாத உதவி அட்மிரல்களை (கப்பற்படை உதவி தளகர்த்தர்களை) நியமிப்பதென்றும் ஒரு சட்டம், அமெரிக்க சட்டசபை கப்பற்படைக் கமிட்டியால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

"சாம்சாம்" என்ற எகிப்தியக் கப்பல் தெற்கு அட்லாண்டிக் கடலில், ஜெர்மானியர்களால் முழுகடிப்பட்டதனால், சுமார் 140 அமெரிக்கப் பிரயாணிகள் பிரான்சில் இறங்கியிருந்தார்கள். அவர்களில் 50 பேர் பெண்கள் ; 20 குழந்தைகள். விஷியில் உள்ள அமெரிக்கர்கள், கூடிய சீக்கிரம் இந்தப் பிரயாணிகள் லிஸ்பனுக்குக் (ஸ்பெயினின் தலை நகர்) கொண்டு போகப்பட்டு, அங்கிருந்து அமெரிக்காவுக்குக் கொண்டு போகப்படுவார்கள் என்று நம்புகிறார்கள்.

அமெரிக்காவின் நடுநிலைமைச் சட்டமே ஒரு பெருந்தவறு என்று அமெரிக்க கடற்படை மந்திரி, மிஸ்டர் கர்னல் நாக்ஸ் கூறினார் அமெரிக்கா, கடல்களின் சுதந்தரத்தைப் பாதுகாத்து, அமெரிக்க கப்பல்கள் பிரிட்டிஷ் துறைமுகங்களிலும், இதர யுத்த ஸ்தானங்களிலும் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார். அமெரிக்க செனட்டின் கப்பற்படை அலுவல் கமிட்டியின் தலைவர், செனேடர் வால்ஷ், வெளிப்படையாக அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்று, அமெரிக்க சட்டசபையின் அங்கத்தினர்களுக்கு அநேக கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றனவென்றும், துணை உதவிக் கப்பல்கள் மூலம் கட்டாயம் ஜெர்மனியுடன் போர்புரியும்படியான அவசரம் சீக்கிரம் வருமென்றும், ஒரு கூட்டத்தில் பேசினார்.

ஜெர்மனியிலும், ஜெர்மனியால் திருடப்பட்ட நாடுகளிலும், எவ்வளவு எஃகு செய்யமுடியுமோ, அவ்வளவு எஃகு அமெரிக்காவால் செய்ய முடியும் என்று அமெரிக்க இரும்பு, எஃகு நிலையத்தின் தலைவர், மிஸ்டர் வால்டர் டவர் கூறினார். அடுத்த வாரத்தில் முடியும் ஒரு வருஷத்தில் அமெரிக்கா 7 கோடியே 60 லட்சம் டன் எஃகு தயார் செய்திருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1938-ம் வருஷத்தைவிட இது 2 கோடியே 50 லட்சம் டன் அதிகப்படியானது.

அமெரிக்கத் துறைமுகங்களில் இருக்கும் சுமார் 80 அயல்நாட்டுக் கப்பல்களைக் கைப்பற்றும்படி அமெரிக்க அரசாங்கத்துக்கு அனுமதியளிக்க அமெரிக்க சட்டசபையின் கூட்டுக்கமிட்டி சட்டம் கொண்டுவருவதற்கு ஒப்புக்கொண்டது.

அமெரிக்காவில் 18 மாதங்களுக்குள்ளாக 13,000 வெடிகுண்டு விமானங்களடங்கிய ஒரு பெரிய பாதுகாப்பு விமானப் படை தயார் செய்யப்படவேண்டும். அதற்காக 250 கோடி டாலர்கள் (அமெரிக்க நாணயம்) ஒதுக்கப்படவேண்டுமென்று அமெரிக்க யுத்த இலாகா, அமெரிக்க சட்ட சபையைக் கேட்கும். அமெரிக்கப் பட்டாளம் எதிர்பார்க்கும் 21,000 ஆகாய விமானங்கள் இந்தக் கணக்கில் சம்பந்தப்படாதவை. இந்த விமானங்கள் செய்தானதும், பிரிட்டனுக்கு விமானங்கள் வேண்டியிருந்தால், இவைகளில் பெரும்பகுதியான பாகம் கட்டாயம் கொடுக்கப்படும் என்று அரசாங்கப் போக்கை உணர்ந்தவர்கள் கூறுகிறார்கள்.

சென்ற செவ்வாய்க்கிழமை இரவு, அமெரிக்க பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் ரேடியோ மூலம் யுத்த நிலைமையைப்பற்றியும் அமெரிக்காவின் கடமையைப் பற்றியும் பேசினார். உலகமே அந்தப் பேச்சை மிக ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. ஹிட்லர் கொள்கையினால் அமெரிக்க நாடுகளுக்கு நேரும் தீங்குகளைப்பற்றி, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தார். அவருடைய பேச்சின் விவரங்கள் இந்த இதழில் வேறொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானீகர், மிஸ்டர் விணாண்டு, இந்த வாரக் கடைசியில் லண்டனைவிட்டு அமெரிக்காவுக்குச் செல்வாரென்றும், யுத்த நிலைமையைப்பற்றி விவரமாகக் கூறுவதற்கே செல்கிறாரென்றும், அமெரிக்க அரசாங்க இலாகா தெரிவிக்கிறது.

### 4. கிரீசும், இடலியும்.

கிரீசைக் கைப்பற்றியதால், ருமேனியாவின் ஏற்றுமதி செய்யக்கூடிய பெட்ரோல் எண்ணெயை பாஸ்பரஸ் மூலமாக டிரீஸ்ட்டுக்குக் கொண்டுவர ஜெர்மனி முயற்சிக்கலாமென்றும், ஆனால் பிரிட்டிஷ் கப்பற்படையின் பொருளாதார முற்றுகை இருக்கும் வரைக்கும் ஜெர்மனியின் முயற்சி பயன்படாதென்றும், ராய்டர் நிருபர் கூறுகிறார்.

கிரீஸில் நடந்த யுத்தத்தில் 3.983 ஆஸ்திரேலியர்கள் பாதிக்கப்பட்டார்கள். இதில் 3,560 பேர்

உயிரிழந்தார்கள்; காயப்பட்ட துருப்புகள் கிரீசிலேயே விடப்பட்டார்கள். 7 டாக்டர்களும், 150 இதரர்களும் காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்காகப் பின்தங்கிவிட்டார்கள். தாங்கள் பின்னுல் தப்பிச் செல்வதற்கு முடியாதென்று தெரிந்திருந்தும், அவர்கள் பின்தங்கனுர்கள்.

கிரேக்க நியாய மந்திரி கிரீஸ் தேசத்துக்குத் துரோகம் செய்துவிட்டு, ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டவர், கிரீசில் யுத்தத்திற்குக் காரணமாயிருந்தவர்கள்மேல் சட்டப்படி வழக்குத் தொடரப்படும் என்று அவர் உத்தரவு பிறப்பித்திருக்கிறாம்!

இத்தாலிய அரசர் திரானு என்ற இடத்தில் இருக்கும்போது உயிர்தப்பினர் என்று தெரியவருகிறது. அரசர் ஊர்வலமாக திரானுவின் ஆகாய விமானச்சாலைக்குச் செல்லும்போது, அவருடன்கூட அல்பேனியாவின் முதல் மந்திரி குதிரையின்மேல் வந்துகொண்டு இருந்தாரென்றும், அந்த முதல் மந்திரியைப்பார்த்து ஒரு கிரேக்க மனிதன் சுட்டானென்றும், சுட்டது குறிதவறிவிட்டதென்றும் தெரிகிறது. தனக்கு வேலை கொடுக்காததினுல், அல்பேனிய அரசாங்கத்தின்பேரில் வஞ்சம் தீர்த்துக்கொள்வதற்காக இம்மாதிரி செய்தானென்றும் கூறப்பட்டது. இப்படிச் செய்தவனை ராணுவக் கோர்ட்டு விசாரணை செய்து, கொலை தண்டனை விதித்தது; கொலையாளியும் கொல்லப்பட்டான்.

### 5. பால்கன்ஸ், துருக்கி, இராக், இரான் முதலியன.

குரோட் உதவி முதன் மந்திரி, ஜூராஜ் குரிஞ்சிவிக், கீழ்க் கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறுர்:—"டால்மேஷியா என்ற குரோட் மாகாணத்தை இத்தாலியர்கள் தங்களுடைய நாட்டில் சேர்த்துக்கொண்டதை, குரோட் மக்களின் முக்கியப் பிரதிநிதி என்ற முறையில், நான் ஆக்ஷேபிக்கிறேன். குரோட்டியர்கள் இந்த மகாணத்தை மீண்டும் தங்கள் தாய் நாட்டுடன் சேர்ப்பதற்கு முயற்சி செய்வார்கள். பெரிய குடியரசுகள் வெற்றிபெறும்போது, அவர்களும் தங்களுடைய நோக்கத்தில் வெற்றி பெறுவார்கள்."

இத்தாலியில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட குரோஷிய என்ற நாட்டை ஒப்புக்கொள்ளமாட்டோமென்றும், யூகோஸ்லாவியா நாட்டிலிருந்து இத்தாலியோடு சேர்க்கப்பட்ட சில பாகங்களை ஆக்ஷேபிக்கிறோமென்றும், தென்னமெரிக்காவிலுள்ள சிலி, பெரு, பொலீவியா, கொலம்பியா முதலிய நாட்டில் வசிக்கும் யூகோஸ்லாவியர்களடங்கிய தேசியப் பாதுகாப்புச் சங்கத்தார் சத்தியம் செய்திருக்கிறுர்கள்.

யூகோஸ்லாவியாவின் அரசர் பீடருக்கு, கனடாவுக்குப் போவதற்கு அமெரிக்க அரசாங்கத்தார் அனுமதியளித்திருக்கிறுர்கள்.

இராக்கில், பழைய 'ரீஜெண்ட்'டான எமீர் அப்துல் இல்லாவைக் கொண்டு புதிய அரசாங்கம் ஏற்படுத்த பிரிட்டன் முயற்சி செய்கிறது. ரஷீத் அலிக்கு ஜெர்மன் உதவி குறைந்துகொண்டே வருகிறது. இராக்கைப்பற்றிய விவரங்கள் இவ்விதழில் வேறு ரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சிரியாவில், சுதந்தரப் பிரெஞ்சுத் துருப்புகள் பிரவேசித்தன வென்றும், சிரியாவின் பிரபல பிரெஞ்சு தளகர்த்தர் கர்னல் கோலட் என்பவர் சுதந்தர பிரெஞ்சுக்காரர்களோடு சேர்ந்துகொண்டு, இராக்குக்கு விஷி அரசாங்கம் உதவி செய்வதைக் கண்டித்தாரென்றும் தெரிகிறது.

சிரியாவை ஜெர்மானியர்கள் படையெடுத்தால், துருக்கி சிரியாவில் பிரவேசித்து தனக்கு அவசியமான தற்காப்பு முறைகளைச் செய்யவேண்டும் என்று துருக்கி சட்டசபை அங்கத்தினர், யால்ட்சின், "யேனி சபா" என்ற பத்திரிகையில் எழுதியிருக்கிறுர்.

### 6. கப்பல் நிலைமை.

"பிஸ்மார்க்" என்ற பிரம்மாண்டமான ஜெர்மன் யுத்தக்கப்பல், பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்களாலும், துணை உதவி விமானப்படையாலும், 1,750 மைல் தூரத்தப்பட்டு, நன்ருகத்தாக்கப்பட்டது. 'டார்பிடோ' வெடிகுண்டுகளால் சுடப்பட்ட ஜெர்மன் யுத்தக்கப்பல் சென்ற செவ்வாய்க்கிழமை காலை 11-மணிக்கு கடலில் முழுகிவிட்டது. "பிஸ்மார்க்" என்ற கப்பல் 35,000 டன் எடையுள்ளது; சென்ற நவம்பர் மாதம்தான் ஹிட்லரின் முன்னிலையில் முதன் முதலில் கடலில் மிதக்கவிடப்பட்டது; 15 அங்குல பீரங்கிகள் எட்டு கப்பலில் இருந்தன. அதை முழுகடிக்கவே முடியாது என்று ஜெர்மானியர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனுல் ஜெர்மனியின் புதியதும், மிகப்பலம் பொருந்தியதுமான பெரிய யுத்தக்கப்பல், பிரிட்டிஷ் கப்பல்களால் முழுகடிக்கப்பட்டது. "பிஸ்மார்க்" மூழ்கியதில் 2,000 ஜெர்மானியர் உயிரிழந்தார்கள்.

இதற்குமுன் பிரம்மாண்டமான பிரிட்டிஷ் யுத்தக்கப்பல், "ஹூட்" "பிஸ்மார்க்" கப்பலின் வெடிகுண்டு பட்டு, சுக்குச்சுக்கலாய் உடைந்து போய்விட்டது. வெடிகுண்டு சாமான்கள் வைத்திருக்கும் கப்பலறையில், எதிரிகளின் குண்டுதாக்கவே, எல்லாம் திடீரெனவெடித்து கப்பல் அழிந்து போய்விட்டது. கப்பலின் எடை 42,100 டன். 1920-ம் வருஷம் இந்தக்கப்பல் கட்டிமுடிக்கப்பட்டது. இந்தக்கப்பல் போனதற்குப் பழிக்குப்பழிவாங்கும் முறையில், "பிஸ்மார்க்" கப்பல் முழுகடிக்கப்பட்டது.

6,000 டன் எடையுள்ள ஒரு ஜெர்மன் வர்த்தக கப்பல், பிரிட்டிஷ் விமானவெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு, சின்னுபின்னமாய் உடைந்துவிட்டது. மற்றொரு 4,000 டன் கப்பல் தாக்கப்பட்டு சேதமடைந்தது.

ஜெர்மனியின் பிரபல சப்மரீன் தளகர்த்தரான குந்தர் பிரியன் என்பவரின் தலைமையில் இருந்த ஜெர்மன் சப்மரீன் காணுமற்போய் இழக்கப்பட்டதாகக் கருதப்பட்டது என்று ஜெர்மானியர்கள் அறிவிக்கிறுர்கள்.

பிரியன் என்பவர் ஜெர்மனியின் சப்மரீன் தளகர்த்தர்களுள் முதன்மையானவர். ஜெர்மனியின் மிக உயர்ந்த ஒலிவ இலைப்படம்வரைந்த இரும்புச் சிலுவைப்பதக்கம் அவருக்குச் சமீபத்தில் தான் கொடுக்கப்பட்டது.

அதிவேகமான யுத்தக்கப்பல்கள் இன்னும் அதிகமான எண்ணிக்கையில் கட்டப்படும் என்று அமெரிக்க பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் அறிவித்தார். சுதந்தர மக்களுக்குப் பெருந்தீங்காக விளங்கும் கொடுமையை அழிப்பதற்கு வேண்டிய யுத்த ஆயுதங்களையும், யுத்த சாமான்களையும், எழுகடல்களையும் தாண்டி அவைகள் தூக்கிச்செல்லும் என்று கூறினுர்.

தூரக்கிழக்கரங்கத்தில், டச்சுத்தீவுகளுக்கும், ஜப்பானுக்கும் இடையில் போய்க்கொண்டிருந்த மூன்று டச்சுக்கப்பல்களை, பிரிட்டிஷ் அதிகாரிகள் கைப்பற்றிக்கொண்டார்கள் என்று சீனப்பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

யுத்த ஆரம்பத்திலிருந்து மேமாத இடைக் காலம் வரைக்கும் முழுகடிக்கப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட எதிரிக்கப்பல்களின் மொத்த டன் கணக்கு 28 லட்சத்து 73 ஆயிரம். இதில் ஜெர்மன் கப்பல்கள் 346; 61 கைப்பற்றப்பட்டன; 285 முழுகடிக்கப்பட்டன. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாட்டுக்கப்பல்களில் முழுகடிக்கப்பட்டவை 38.

### 7. தூரக்கிழக்கு அரங்கம்.

சிங்கப்பூர் பாதுகாப்பு உதவிக்காக, ஆப்பிரிக்கா சண்டையில் இத்தாலியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட யுத்த தளவாடங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. சமீபத்தில் சீன ராணுவக்கோஷ்டியார் சிங்கப்பூருக்குப் போனபோது, இந்த யுத்த தளவாடங்களைப் பார்வை யிட்டார்கள். அவர்கள் பார்வையிட்டதில் ஒன்று, ஒரே வரிசையாய் இருந்த விமான எதிர்ப்பு பீரங்கிகள்.

மலேயாவின் பட்டாளங்களை தூரக்கிழக்கு அரங்கத்தின் மூலபலம் என்று பிரிட்டிஷ் ராணுவத் தலைமை அதிகாரிகள் கருதுகிறுர்கள் என்று மேஜர்-ஜெனரல் ஏ. சி. பர்சிவல் (மலேயா தளகர்த்தர்) கூறினுர். மலேயாவின் வடகோடி எல்லையிலிருந்து போர்னியா வரைக்கும் ஒரு சங்கிலித் தொடர்போல யுத்த அரண்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று

அவர் அறிவித்தார். சீனவின் எல்லே வரைக்கும் இருக்கும் விமானச் சாலேகளை, தரைப்படை தான் பாதுகாக்க வேண்டுமென்றும், முன்னமேயே அநேக விமானச் சாலேகளைக் கட்டி வைத்திருந்தது ஒரு நல்ல காரியமென்றும் கூறினர்.

ஜப்பானிய அரசாங்கமும், அதன் பாதுகாப்புத் தளகர்த்தர்களும் சந்தித்து, உள்நாட்டு விஷயங்களைப் பற்றியும், அகில தேசீய விஷயங்களைப் பற்றியும் பேசினர்கள். அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகாவும், யுத்த மந்திரி, ஜெனரல் டோஜோவும், தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் விஷயங்களைப் பற்றி ஜப்பானிய சக்கரவர்த்திக்கு தெரிவித்தார்கள்.

டச்சுக் கிழக்கிந்திய தீவுகளில் சுதேசிகள் ஒரு அளவுக்குக் கட்டாய ராணுவ சேவை செய்யும்படி அரசாங்கத்தாரால் உத்தரவிடப்பட்டிருக்கிருர்கள்.

ஜப்பானிய அரசாங்கம், கிழக்கிந்திய தீவுகளோடு யாதொரு பேச்சு வார்த்தையும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், வெறும் வார்த்தைகளால் யாதொரு பலனுமில்லே யென்றும், "கோகுமின் ஷிம்பன்" என்ற ஜப்பானியப் பத்திரிகை கூறுகிறது.

### 8. விஷி.

விஷி அரசாங்கம் ஜெர்மனியுடன் வைத்துக் கொண்ட ஒப்பந்தத்தைக் கண்டித்து, பார்லிமெண்டில் பிரிட்டிஷ் அயல்நாட்டுக் காரியதரிசி, மிஸ்டர் ஈடன், பேசியிருக்கிருர். நாஸிகளுடன் நேசப்பான்மையாய் இருந்து அவர்களுக்கு நேர்முகமாகவாவது, அல்லது மறைமுகமாகவாவது, விஷி அரசாங்கம் ஜெர்மனிக்கு உதவி செய்வதை, பிரிட்டன் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்றும், ஸ்திரமான கொள்கையுடன் பிரிட்டன் வேலே செய்யுமென்றும், எதிரிகளே விஷி அரசாங்க எல்லேக்குள் போர்புரிய வேண்டியிருந்தால், பிரிட்டன் அதற்குத் தயங்காதென்றும், மிஸ்டர் ஈடன் அறிவித்தார்.

பாரிசிலுள்ள அயல்நாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும், விஷிக்குச் செல்லும்படி ஜெர்மானியர்களால் உத்தரவிடப்பட்டிருக்கிருர்கள். விஷிதான் பிரெஞ்சு தேசத்துக்கு உண்மையான தலைநகரென்ற காரணம் கூறப்பட்டது.

விஷி அரசாங்கம் ஜெர்மனியுடன் ஒத்துழைப்பது என்று செய்த ஏற்பாடு அமெரிக்காவுக்கருகிலிருக்கும் பிரெஞ்சு பிரதேசங்களை சம்பந்தப்படுத்தவில்லே என்று விஷி அரசாங்கம் உறுதி கூறியிருக்கிறது. இதைப்பற்றி அமெரிக்காவிலுள்ள பிரெஞ்சு ஸ்தானிகர், மிஸ்டர் ஹென்ரி ஹே, தன் அரசாங்க அபிப்பிராயத்தை எழுத்து மூலமாக மிஸ்டர் சம்னர் வெல்ஸ் (அரசாங்க உதவி மந்திரி) யிடம் கொடுத்தார்.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள பிரான்சில், இத்தாலியர்களும், ஜெர்மானியர்களும் கலந்து பேசுவதில்லே யென்றும், ஒருவரையொருவர் சந்தித்தால் சலாம் வைப்பதற்கு இஷ்டமில்லாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிருர்களென்றும், பிரான்சில் இருந்து ஸ்பெயினுக்குச் சென்ற ஒரு பிரயாணி கூறுகிருர்.

நார்வேயில், கப்பல் கட்டும் சாலேகளில் வேலேசெய்யும் தொழிலாளிகள் வேலே நிறுத்தம் செய்துவிட்டார்கள். நாஸிகள் தனியாக ஒரு தொழிலாள சங்கம் ஏற்படுத்த முயற்சி செய்ததைக் கண்டித்து வேலே நிறுத்தம் செய்யப்பட்டது.

### 10. நடு நிலேமை நாடுகள்.

ஸ்பெயினில், சீனர் சூனர், ஜெனரல் பிராங்கோவின் பலாஞ்சு கட்சியின் அரசியற்கமிட்டிக்குத் தலேவராக நியமிக்கப்பட்டிருக்கிருர். ஜெனரல் பிராங்கோவுக்கு அடுத்த முதன்மையான ஸ்தானம் இதுதான். சமீபத்தில் சூனர் தம்முடைய அயல்நாட்டு மந்திரி பதவியை ராஜிநாமா செய்தபோது, ஸ்பெயினின் சர்வாதிகாரி, ஜெனரல் பிராங்கோ, அதை அங்கீகரிக்க மறுத்துவிட்டார்.

ருஷ்யா தனது கப்பற்படையைப் பலப்படுத்திக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. சென்ற வாரம், இரண்டு உதவிப்படைத் தளகர்த்தர்களும், ஒன்பது பின்னுதவித் தளகர்த்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்; இவர்களைச் சேர்த்தால், ருஷ்ய கப்பற்படையில் 10 உதவித்தளகர்த்தர்களும், 54 பின்னுதவித்தளகர்த்தர்களும் இருக்கிருர்கள். கரையோரக்கப்பல்வேலேயிலிருந்த அநேகருக்கு மேலுத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன.

ருஷ்யாவில் யுத்தத்திற்கு விரோதமாகச் சிலர் பிரசாரம் செய்து வருகிருர்கள். அவர்களைப்பற்றி எச்சரிக்கைசெய்து "பிரவ்டா" என்ற பிரபல ருஷ்யப் பத்திரிகை எழுதியிருக்கிறது. நாட்டுமக்கள் யுத்தத்திற்குத் தயாராக இருக்கவேண்டும் என்று கூறுவதை விட்டு, சமாதானத்தின் மாய்கைகளைப்பற்றி இப்போது பிரசாரம் செய்வது கூடாதென்று அப்பத்திரிகை கூறுகிறது. ருஷ்யாவுக்கு இந்த இரண்டாவது உலக யுத்தத்தில், ஒரு முடிவான தீர்ப்பு ஏற்படவேண்டும்; அதாவது, ருஷ்யப்பட்டாளம் உலகத்திலிருக்கும் எல்லாப் பட்டாளங்களைவிட பலம் பொருந்தியது என்பதுதான்—என்று "பிரவ்டா" பத்திரிகை எழுதுகிறது.

வடக்கு அயர்லாந்தில், கட்டாய ராணுவச்சேவையைப்பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது. கட்டாயச் சேவையை மிஸ்டர் டிவெலீரா என்ற ஐரிஷ் பிரசிடெண்டு ஆட்சேபித்தார். அனுவசியமான தொந்தரவுகள் இந்த சமயத்தில் வேண்டாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் உத்தரவை ரத்து செய்துவிட்டது.

---

# பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் முக்கியமான பேச்சு.


## ஹிட்லரின் நோக்கத்தை எதிர்க்க முயற்சி.

### "வரையறையற்ற தேசீய நெருக்கடி"—அமெரிக்கக் குடியரசுகளுக்கு அறிவிப்பு.

[சென்ற செவ்வாய்க்கிழமை இரவு, அமெரிக்காவின் தலேவரான ரூஸ்வெல்ட், யுத்தத்தின் போக்கையே மாற்றக்கூடிய ஒரு முக்கியமான 'ரேடியோ' பிரசங்கம் செய்தார். அவர் பேசும்போது, தான் பிரசிடெண்டின் வாசஸ்தலமாகிய வெள்ளே மாளிகையிலிருந்து பேசுவதாகவும், தனக்குமுன் அகில அமெரிக்க ஐக்கிய சங்க நிர்வாக அங்கத்தினர்களும், கனடாவின் ஸ்தானிகரும், அவர்களின் குடும்பங்களும் அமர்ந்திருக்கிருர்களென்றும் குறிப்பிட்டார். அகில அமெரிக்க சங்க நிர்வாகிகள், அமெரிக்காவின் தலேநகரத்தில் இருக்கும் எல்லா அமெரிக்க குடியரசுகளின் ஸ்தானிகர்கள்தான். அதைக் குறிப்பிட்டதன் நோக்கம் அமெரிக்கா முழுவதும் தான் கூறும் அபிப்பிராயத்தை ஆதரிக்கிறது என்பதைக் காட்டுவதற்காக. பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தம்முடைய பேச்சில், மூன்று விஷயங்களை முக்கியமாகக் குறிப்பிட்டார். முதலாவது, கடல்களில் ஆதிக்கம் பெற ஹிட்லர் செய்யும் ஒவ்வொரு முயற்சியையும் அமெரிக்கா தீவிரமாக எதிர்க்கும். இரண்டாவது, அமெரிக்க சாமான்கள் பத்திரமாகப் பிரிட்டனுக்குப் போய்ச் சேரும்படி செய்வதற்கு அமெரிக்க காவல்படைகள் செய்யும் உதவிக்கு மேலும் அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் அமெரிக்கா கட்டாயம் எடுத்துக்கொள்ளும். மூன்ருவது, "வரையறையற்ற தேசீய நெருக்கடி" ஏற்பட்டிருப்பதாக பிரசி

# கிரீட் தீவின் பிரதேச படம்

அளவு 1 அங்குலம் = 32 மைல்கள்




Reg. No. 62/2 Copies 9700 Heliozinco., Survey Office, Madras. 1941.

டெண்ட் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டது. பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் பேச்சில் சில முக்கியமான பாகங்கள் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன :—]

" வரையறையற்ற தேசிய நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக நான் பிரகடனம் செய்திருக்கிறேன். நான் இந்நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது முற்றிலும் பொருத்தமேயாகும். அமெரிக்கக் குடியரசுகளிடை ஒற்றுமை ஏற்ப வேண்டிய அவசியம் இப்போதுபோல் இதற்கு முன் ஒருபொழுதும் இருந்ததில்லை. நமது எதிர்கால சுதந்தரம் நமது மற்ற அமெரிக்க குடியரசு நாடுகளின் எதிர்கால சுதந்தரத்தையே பொறுத்திருக்கிறது.

" முதலாவது முக்கிய விஷயம் யாதெனில் ஐரோப்பியப் போராக ஆரம்பமான யுத்தம் இப்பொழுது உலக யுத்தமாக வளர்ந்துவிட்டது. உலக முழுவதையும் தங்கள் ஆதிக்கத்திற்குள்ளாக்கும் பொருட்டு இது ஒரு உலக யுத்தமாக வேண்டுமென்றே நாஸிகள் எப்போதும் எண்ணி வந்திருக்கின்றனர்.

## ஹிட்லரின் நோக்கம்.

"ஹிட்லர் ஐரோப்பாவைத் தனது ஆதிக்கத்திற்குள்ளாக்குவதுடன் தனது காரியம் தீர்ந்துவிடுமென்று ஒருபோதும் எண்ணியதில்லை. எல்லா கண்டங்களையும் கைப்பற்றுவதற்கான ஒரு லட்சியத்தில் ஐரோப்பாவை ஜெயிப்பதென்பது ஒரு படியேயாகும். ஜெர்மன் முன்னேற்றத்தை நாம் இப்பொழுதே தீவிரமாக எதிர்த்துத் தடுத்தாலன்றி அமெரிக்கக் கண்டங்களும் நாஸிகளின் தாக்குதலுக்குள்ளாகிவிடுமென்பதுபற்றிச் சிறிதும் சந்தேகமில்லை.

" இந்த உதவியைச் செய்வதில் நமக்குள்ள சுயநலக் கலப்பை நாம் மறைக்கவில்லை. இதனை பிரிட்டன் மட்டுமின்றி ஜெர்மனியும் உணர்ந்திருக்கிறது. ஒரு வருஷமாகியும் பிரிட்டன் வெகுதூரத்திலுள்ள போர்க்களங்களிலும் இன்னும் தீரமாகப் போராடி வருகிறது. நாம் நமது ஏராளமான உற்பத்தியை இரட்டித்திருக்கிறோம். மாதாமாதம் நாம் நமக்கும் பிரிட்டனுக்கும் சீனுவுக்கும் இறுதியில் எல்லா ஜனநாயக நாடுகளுக்கும் வேண்டிய யுத்த தளவாட சப்ளையை பெருக்கிக்கொண்டே வருகிறோம். இந்த யுத்த சாதனங்களது சப்ளை நிற்காது. இது அதிகரிக்கும்.

" இப்பொழுது யுத்தம் நமது கண்டங்களையே நெருங்கிக் கொண்டிருக்கிறது. அது நமக்கு மிகவும் சமீபமாக வந்துகொண்டிருக்கிறது. நாஸிகள் அட்லாண்டிக்கிலுள்ள எந்தத் தீவையாவது தங்கள் வசப்படுத்துவார்களாயின் அதன்மூலம் வட அல்லது தென் அமெரிக்காவுக்கும், யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான தீவுகளுக்கும் ஆபத்தேற்படும்.

## கடல் சுதந்தரம்.

" எல்லாச் சுதந்தரங்களும் கடல் சுதந்தரமே அஸ்திவாரமாகும். சுதந்தரமென்பதன் மூலம், வாழும் சுதந்தரத்தையே குறிப்பிடுகிறேன். பிற நாட்டினரை ஜெயித்து அடிமைப்படுத்தும் சுதந்தரத்தை நான் இதன் மூலம் குறிப்பிடவில்லை. அமெரிக்க நாடுகளின் சரித்திரம் அனைத்தும் கடல் சுதந்தரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

" நமது தேசியக் கொள்கை இதுதான்; முதலாவதாக ஹிட்லர் தமது ஆதிக்கத்தை மேற்குக் கண்டங்களில் விஸ்தரிக்கும் முயற்சிகளையா அல்லது அவ்விதம் செய்வதற்கான பயமுறுத்தல்களையோ நமது எல்லா சாதனங்களையும் கொண்டு எங்கு அவசியமாக விருந்தபோதிலும் எதிர்க்கவேண்டும். சமுத்திரங்கள்மீது ஹிட்லர் ஆதிக்கம் கொள்வதைத் தடுக்கவேண்டும். அமெரிக்கக் கண்டங்களை எதிர்ப்பதற்காக ஹிட்லர் எந்த இடத்தையும் மூலஸ்தானமாகக் கொள்ளாமல் தடுக்கவேண்டும். இரண்டாவதாக ஹிட்லரிஸத்தை எதிர்க்கும் பிரிட்டனுக்கும் அந்த நாடுடன் சேர்ந்து யுத்தம் செய்யும் எல்லா நாடுகளுக்கும் சகல விதமான இராணுவ உதவியும் செய்வோம். நமது பாதுகாப்புடன் சாமான்கள் பிரிட்டனுக்கு அனுப்பப்படுகின்றன. அவசியமான பாதுகாப்புகளும் அதிகரிக்கப்படும் ".

---

# கிரீட்டில் மாபெரும் யுத்தம்.

## கிழக்கு மத்தியதரைக்கடலின் கேந்திர ஸ்தானம்.

கிரீசைச்சேர்ந்த கிரீட் என்ற பெருந்தீவில் கடுமையான யுத்தம் நடைபெறுகின்றது. ஜெர்மானியர்கள் ஆகாய விமானங்கள் மூலமாகக் கொண்டுவரப்பட்ட துருப்புகளைத் தீவில் இறக்கி, அதைக் கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள். பலமுள்ள பிரிட்டிஷ் கப்பற்படை இருப்பதினால், கடல்வழியாகத் துருப்புகளைக்கொண்டு வந்து கிரீட்டில் இறக்குவதற்கு ஜெர்மானியர்களால் முடியவில்லை. பிரிட்டிஷ் துருப்புகளும், கிரேக்கத் துருப்புகளும், தீவைப் பாதுகாத்துப் போராடிக்கொண்டிருக்கின்றன. அவைகளின் தலைவர் நியூஜிலந்து தளகர்த்தராகிய மேஜர்-ஜெனரல் பிரேபர்க் என்பவர். உயிருள்ளவரைக்கும் கிரீட்டைப் பாதுகாப்போம் என்று பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், கூறியது கவனிக்கத்தக்கது.

ஜெர்மானியர்களும், நேசதேசத்தார்களும், கிரீட் தீவின் முக்கியத்தை நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். மத்தியதரைகடலில், சிசிலி, சார்டீனியா, சைப்ரஸ் என்ற மூன்று தீவுகளுக்குப்பின், கிரீட்தான் பெரிய தீவு. அதனுடைய வடகிழக்கு முனையாகிய சிடரோ என்பது ஆசியா மைனரின் மாக்ரி முனைக்கு 110 மைல் தூரமுள்ளது; இவைகளுக்கிடையில் கார்பதோஸ், ரோட்ஸ் என்ற இரு தீவுகள் இருக்கின்றன. கிரீட்டின் வடமேற்கு முனை, கிரபுசா, கிரீசின் தென்பாகத்திலுள்ள மொரீயாவின் மலியா முனைக்கு 60 மைல் தூரத்திலுள்ளது. மத்திய தரைக்கடலுக்கும், ஆர்ச்பிலகோ என்ற பல தீவுகளடங்கிய கிரீசின் கிழக்குக்கடலுக்கும், ஒரு முடி வெல்லைபோல் கிரீட் தீவு விளங்குகிறது. ஈஜியன் கடலிலிருந்து வெளிச்செல்லுபவைகளைத் தணிக்கை பார்க்கும் ஸ்தானத்தில் கிரீட் இருக்கிறது. அது பிரிட்டிஷார் கையிலிருப்பதால், டோடெகனீஸ் தீவுகளில் இருக்கும் எதிரிகளுடைய துருப்புகள் பிரயோசனமற்றவையாயிருக்கின்றன. இதல்லாமல், " மேற்கு ஆசியாவின் சாவி" என்று கூறப்படும் சைப்ரஸ் என்ற முக்கியமான தீவுக்கும், லெவாண்ட் பிரதேசத்திற்கும், முன்னுள்ள ஒரு யுத்த தளமாக கிரீட் இருக்கிறது. அலெக்சாண்டிரியா என்ற பிரிட்டிஷ் கடற்படைத் தளத்திற்கு, கிரீட் 300 மைல் தூரத்திலுள்ளது. லண்டன் " டைம்ஸ் " பத்திரிகை இந்தத்தீவின் முக்கியத்தைப்பற்றிக் கூறியிருக்கிறது. " எவ்வளவு தியாகம் செய்தாவது பெறும்படியான பரிசுதான் கிரீட் தீவு. எகிப்தைப் பாதுகாப்பதற்கும், கிழக்கு மத்திய தரைக்கடலில் பிரிட்டிஷ் கப்பற்படை தாராளமாகச் சஞ்சரிப்பதற்கும், கிரீட் மிகவும் முக்கியமானது. ஆர்ச்பிலகோவில் எதிரி கைப்பற்றியவைகளைப் பாதுகாப்பதற்கும், அதைவிட முக்கியமாக, எகிப்தைத் தாக்குவதற்கும், கிரீட் எதிரிக்கு மிக அருமையான ஆயுதமாக உதவும். அதை நாம் இழந்துவிட்டால், அலெக்சாண்டிரியாவில் உள்ள நம்முடைய மத்தியதரைக் கடற்படை அதனால் பாதிக்கப்படாது; ஆனால், ஒவ்வொரு கடற் சண்டைக்கும் அது ஒரு தொந்தரவாகும்; இப்போது அட்மிரல் கன்னிங்காம் சமாளித்துவரும் அசௌகரியங்கள் அதிகப்படும் " என்று " டைம்ஸ் " பத்திரிகை கூறுகிறது.

கிரீட் தீவின் மொத்த விஸ்தீரணம் 3,320 சதுர மைல். கிழக்கு—மேற்கு நீளம் 160 மைல்; வடக்கு—தெற்கு அகலம் 35 மைல் முதற்கொண்டு $7\frac{1}{2}$ மைல் வரைக்கும், பலவிதமாக இருக்கிறது. இதில் ஒரு முக்கியமான கடற்படைத்தளம் சூடா என்பது. அது ஒரு மிக அருமையான இயற்கைத் துறைமுகம். பெருங்கப்பல்களுக்கு முழுதும் இயற்கைப் பாதுகாப்பளிக்கும் இந்தக் துறைமுகம் $8\frac{1}{2}$ சதுர மைல் விஸ்தீரணமுள்ளது.

### நாகரிகங்கள் சந்திக்குமிடம்.

கிரீட் தீவு பெரும்பாலும் மலைப் பிரதேசமுள்ளது; பெருங் குகைகளுள்ளது. அந்தக் குகைகளில் துருப்புகள் அநேக நாள்கள் வரைக்கும் ஒளிந்துகொள்ளலாம். லாசீத்தி என்ற இடத்தில் இருக்கும் குகைதான் மிகப் பேர்போனது. டிக்டேயன் குகை என்ற அந்தக் குகையில்தான், சீயஸ் என்ற கிரேக்கக் கடவுள்களில் முதன்மையானவர் பிறந்தார் என்று சொல்லுகிறார்கள்.

ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா இவைகளின் மத்தியிலிருப்பதால், கிரீட் அநேக நாகரீகங்கள் சந்திக்குமிடமாய் இருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு 3,500 வருஷங்களுக்குமுன்பே நாகரீகத்திற்கும், கலைக்கும் உறைவிடமாய் கரீட் விளங்கியது.

இந்த நூற்றாண்டின் முதல் வருஷங்களில், கிரீட் கிரேக்க தேசத்தோடு சேர்ந்து, கிரேக்கக் கொடியை உயர்த்தி, கிரேக்க அரசரின் பெயரால் அரசாங்கம் நடத்தி, முடிவில் 1912-ல் கிரேக்க சட்டசபையில் பிரதிநிதிகள் அனுப்பும் உரிமையைப்பெற்றது. 1913-ம் வருடு லண்டன் சமாதான உடன்படிக்கையின்படி, கிரீட் தீவு, மொழியிலும், ஆத்மார்த்தத்திலும், சமூதாயத்திலும் ஒற்றுமையுள்ள கிரேக்க தேசத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுதிருந்து இந்த யுத்தம் வரைக்கும், கிரீட்டினுடைய சரித்திரம், கிரீசினுடைய சரித்திரத்தில் ஐக்கியமாய்விட்டது.

கிரேக்க தேசம் ஜெர்மனியின் அடிமை நாடாவதற்கு முன்னமேயே, கிரேக்க அரசாங்கம் கிரீட்டுக்கு வந்துவிட்டது. தம்முடைய நேச தேசமாகிய பிரிட்டனுடைய உதவிகொண்டு, நாஜிகளுடைய கொள்ளைக் கூட்டத்தை எதிர்த்து, கடைசி சுதந்தர கிரேக்கப் பிரதேசமாகிய கிரீட்டைப் பாதுகாக்க வேண்டுமென்று, கிரேக்க அரசாங்கம் தீர்மானித்தது.

ஆனால் இந்த மேமீ 19உ திங்கட்கிழமை, ஜெர்மானியர்கள் ஆகாய மூலமாக கிரீட்டைத் தாக்கினார்கள். கிரீட் யுத்தம் மும்முரமாக ஆரம்பித்தது. முதல் நாள் காலி செய்யப்பட்ட பிரிட்டிஷ் ஆகாய விமானச் சாலைகளுக்கருகே, திங்கட்கிழமை இரவு ஆகாய விமானங்களிலிருந்து ஜெர்மானியர்களின் முதல்படை, "பாரஷூட்" என்ற விமான விரிப்புக் குடையின் உதவியினால், கீழேவந்து சேர்ந்து போர் செய்ய ஆரம்பித்தது. சூடா விரிகுடாவைச்சுற்றி நடந்த சண்டை, பின்பு, கானியா ரோட்டுச் சண்டையாக மாறிவிட்டது. காண்டியா, ரேதிமோ என்ற இடங்களுக்கருகில், யந்திர பீரங்கிகளுடன் ஜெர்மன் துருப்புகள் விமானங்களிலிருந்து கீழிறங்கின. கீழிறங்கியபிறகு, கம்பியில்லாத் தந்தி மூலமாக, மேலிருக்கும் ஆகாய விமானங்களுக்குச் செய்தியனுப்டப்பட்டது. செவ்வாய்க்கிழமையன்று, அதிகத் துருப்புகள் கடல் விமானங்கள் மூலமாக வந்திறங்கின. அந்தக் கடல் விமானங்களில் சில, கடற்கரையோரத்திலிருந்து ரேதிமோ என்ற இடத்துக்கருகில் சுடப்பட்டு முழுகடிக்கப்பட்டன. ஆனால், தரையில் இறங்கிய ஜெர்மன் சிப்பாய்கள் விரைந்து நாலா திக்குகளிலும் ஓடி, காட்டுக்குள் நுழைந்து ஒளிந்துகொண்டார்கள்; பிறகு அவர்கள் பட்டாளங்களாக ஒன்று சேர்ந்து அணிவகுத்து நின்றார்கள்.

### பிரிட்டிஷ் நாசகாரியின் வெற்றி.

ஜெர்மனியர்கள் ஆகாய விமானத்திலிருந்து குதித்து இவ்வளவு பிரம்மாண்டமான முறையில் தாக்கியது, கிரீட்டில்தான். அவர்களுடைய முக்கியமான நோக்கம், சூடா விரிகுடாவைக் கைப்பற்றி, அதைப் பாதுகாப்பவர்களை உள்நாட்டுக்குள் துரத்திவிடவேண்டுமென்பது. பாதுகாப்பாளர்கள் மூன்று வாரத்துக்குள் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியிருந்தது; அவ்வளவு சிறிய காலத்துக்குள் ஒரு பட்டாளத்துக்கு வேண்டிய முன்னேற்பு செய்து, ஒரு பெரிய தீவைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதென்பது சுலபமான காரியமல்ல. நேசத் துருப்புகள் ஹெராகிளியான் பிரதேசத்திலிருந்து ஜெர்மன் துருப்புகளை விரட்டிவிட்டார்கள்; ரேதிமோ என்ற இடத்தில் இறங்கிய ஜெர்மானியர்கள் முறியடிக்கப்பட்டார்கள்; பட்டணமும், ஆகாய விமானச்சாலையும் நேச தேசத்தார் கையில் இருக்கின்றன. மாலேமி விமானச்சாலை ஜெர்மனியர்களிடம் இருக்கிறது. நேச தேசத்தார்கள் கிழக்கில் பல இடங்களிலிருந்து பீரங்கிகளால் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஹிட்லர் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் அனுப்பும் ஏராளமான துருப்புகள் பீரங்கிகளுக்கிரையாகின்றன. கரையோரங்களில் எந்த ஜெர்மன் கப்பல்களும் வராமல் பிரிட்டிஷ் கடற்படை தடுக்கிறது. எதிரிகளுடைய கப்பல்களும் துணைக் கப்பல்களும், ஒரு ஜெர்மன் நாசகாரியினால் பாதுகாக்கப்பட்டுவரும்போது, (மேமீ 21,22-ந் தேதி நள்ளிரவில்,) பிரிட்டிஷ் கப்பல்களால் தாக்கப்பட்டு சில முழுகடிக்கப்பட்டன; சில சிதறடிக்கப்பட்டன. இதைப்பற்றிப் பின்னால், ஒரு பிரிட்டிஷ் நாசகாரியின் காப்டன் கூறியதாவது:—"நாங்கள் நான்கங்குல பீரங்கிகளால் சுட்டு ஜெர்மன் கப்பல்களை முழுகடித்தோம். உடைந்த கப்பல்களின் பலகைகளைப் பிடித்துக்கொண்டு ஆயிரக்கணக்கான ஜெர்மானியர்கள் தத்தளித்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் செய்த ஏராளமான சேதத்தினால், அன்றிரவு கிரீட்டில் ஒரு ஜெர்மன்கூடக் கரையேறி இருக்க முடியாது."

துருப்புகளைக்கொண்டு செல்லும் ஜெர்மன் விமானங்களை, பிரிட்டிஷ் போர்புரியும் விமானங்கள் தாக்கிக்கொண்டு வருகின்றன. ஜெர்மானியர்கள் கிரீட் மக்களுக்கு பீதியை உண்டாக்கும் நோக்கத்துடன் அநேக விமானங்களிலிருந்து வெடிகுண்டுகளைப்போட்டபடியே இருக்கிறார்கள். யுத்தத்தின் முந்திய பாகத்தில் ராட்டர்டம் என்ற இடத்தில் கண்மூடித்தனமாய் வெடிகுண்டுகளை வீசியது போல, கிரீட்டில் வெடிகுண்டுகள் வீசப்படுகின்றன. ஆனால், கிரீட் மக்கள், லண்டனிலுள்ள மக்களைப் போல், ஆச்சரியப்படத்தக்க அமைதியுடன் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிரேக்க அரசரும், கிரேக்க அரசாங்கமும் இருக்கும் தலைமை ஸ்தானத்தை ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் தாக்கின. அவர்கள் கிரீசை விட்டு எகிப்துக்குச் சென்றுவிட்டார்கள். அவர்கள் இருந்தால் யுத்தம் தாராளமாக, தங்குதடையின்றி, நடப்பதற்கு இயலாதென்று நினைத்து, வெளியேறிவிட்டார்கள். யுத்தம் மிக மும்மரமாக நடக்கும் என்று தெரிகிறது. "கிரீட்டை நாம் கைவிடமாட்டோம்," என்று மேஜர்-ஜெனரல் ஹேவுட் கூறியிருக்கிறார். அவர்தான் கிரீட்டுக்குச் சென்ற பிரிட்டிஷ் ராணுவத் தூதுகோஷ்டியின் தலைவர். அவர் கட்டாயம் விஷயத்தை அறிந்தே கூறியிருக்கிறார்.

---

## "ரஷீத் அலியின் செய்கை: இஸ்லாம் மதத்துக்கு விரோதம்."

### நைஜாம் அரசரின் அறிக்கை: இந்திய முஸ்லீம்களுக்கு வேண்டுகோள்.

[சென்ற வாரத்திய "சஞ்சிகை"யில், இராக்கில் பிரிட்டிஷார் செய்த காரியத்தை ஆதரித்து, மேன்மைதங்கிய ஹைதராபாத் நிஜாம் அரசர் விடுத்த அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது. அந்த அறிக்கையின் விவரம் இப்போது கீழே தரப்படுகிறது:—]

"இராக்கில் சமீபத்தில் சில சம்பவங்கள் நடந்தன. அவைகளைப்பற்றி, என்னுடைய நாட்டு முஸ்லீம் மக்களும். பொதுவாக, இந்தியா, நெருங்கிய கிழக்கரங்கம், இவைகளிலுள்ள முஸ்லீம் மக்களும் உண்மையான விஷயங்கள் தெரியாமல், தவறாகச் சில அபிப்பிராயங்கள் கொண்டிருக்கக்கூடும். அவைகளை நீக்குவதற்காகவே, நான் இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்.

"இராக் என்ற புதிய நாட்டை ஏற்படுத்தி, அதற்குத்தனி அரசாங்கம் உண்டாக்கி, அதைச் சுதந்தர நாடாக்குவதற்கு, பிரிட்டன் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டது. இராக்குடன் நெருங்கிய சிநேகபாவத்துடன் இருக்கவேண்டுமென்று, பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்புகிறது. இது எனக்கு நிச்சயமாகத் தெரியும். இராக்கில், பிரிட்டனுடைய முழு நோக்கம், எகிப்து, துருக்கி என்ற இரு நேச நாடுகளுடன் உள்ள போக்குவரத்து சாதனங்களைக்

காப்பாற்றுவதுதான். 1930-ம் ஆண்டு இராக் பிரிட்டனுடன் செய்துகொண்ட பரஸ்பர உதவி ஒப்பந்தத்தில் இந்த விஷயம் விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது; அதன்படி, பிரிட்டனுக்கு வேண்டிய உதவியை இராக் செய்வதாக ஒப்புக்கொண்டது. போக்குவரத்து சாதன சம்பந்தமான சௌகரியங்களை பிரிட்டன் அடைந்ததும், பழையபடி இராக்குடன் நெருங்கிய நேசம் கொள்ளும் என்பதில் யாதொரு வித சந்தேகமுமில்லை.

## இராக்கின் நன்மை.

“இராக்கில் ஏற்பட்ட சச்சரவுக்குக் காரணம் ரஷீத் அலியின் துரோகம். ஜெர்மனியினுடைய சூழ்ச்சிக்குக் கையாளான ரஷீத் அலி கலகம் செய்து அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு சட்டத்தின்படி அரசருக்குப்பதிலாக ஆட்சி செய்துவந்தவரை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டார். இராக்கில் தப்பு வழியில் திருப்பப்பட்ட ஒரு சிறு கூட்டத்தினரின் உதவியைக் கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் செய்த ஒப்பந்தத்தை உடைத்துவிட்டு, ஒப்பந்தத்தின்கீழ் பிரிட்டிஷார் கையிலிருந்த ஹப்பானியா ஆகாய விமானச் சாலையை தாக்கினார். நம்முடைய பிரிட்டிஷ் துருப்புகளும் இந்தியத்துருப்புகளும் தாக்குதலைப் பலமாய் எதிர்த்தன. ரஷீத் அலியின் துருப்புகள் பின்தள்ளப்பட்டன. பிரிட்டிஷ் துருப்புகள் தற்காப்பிற்காகச் சுடும்படி நேர்ந்தது. முன்பு கூறியபடி போக்கு வரத்து சாதனங்களைத் திறந்தபடி வைத்திருப்பதற்காகத்தான் பிரிட்டிஷ் துருப்புகள் போர்புரிந்தன. இந்தியாவின் பாதுகாப்பிற்கும், எகிப்தின் பாதுகாப்பிற்கும் இந்தப் போக்குவரத்து சாதனங்கள் மிகவும் முக்கியமானவை. பிரிட்டிஷார் செய்த காரியம் இராக்கின் நன்மையை உத்தேசித்துச் செய்யப்பட்டது.”

“இஸ்லாமுடைய முக்கியமான கொள்கைகளில் ஒன்று, கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுதலாகும். ரஷீத் அலியும், அவரைச் சேர்ந்தவர்களும் இந்தக் கொள்கைக்கு விரோதமாக நடந்துகொண்டார்கள். அவர்களுடைய செய்கையை நான் முழு மனதுடன் கண்டிக்கிறேன். இந்தியாவிலுள்ள முஸ்லீம் மக்கள் அனைவரும் என்னுடன் சேர்ந்து இஸ்லாம் மதத்துக்கு விரோதமாக நடந்துகொண்டவர்களுடைய செய்கையை வன்மையாகக் கண்டிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.”

# ரஷீத் அலியின் புரட்சி : ஜெர்மனியின் சூழ்ச்சி.

## முதலிலிருந்து துரோக சிந்தனை : அந்தரங்க சதியாலோசனையின் முடிவு.

[இராக்கில் ரஷீத் அலி செய்த துரோகத்தின் இரகசியங்களும், பஸ்ராவில் ஜெர்மனியின் கையாளாக அவர் நடந்துகொண்ட விவரங்களும், சிம்லாவிலிருந்து இந்திய அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் காணப்படுகின்றன. அந்த அறிக்கை இந்தியப் பாதுகாப்பு இலாகா (பொதுமக்கள் தொடர்பு உட்பிரிவு) வினால் வெளியிடப்பட்டிருக்கிறது. அதனுடைய விவரங்கள் கீழே தரப்படுகின்றன :—]

இராக்குக்குத் துரோகம்செய்து, அதைக் காட்டிக்கொடுக்க முயற்சிசெய்த ரஷீத் அலியின் நோக்கமும், அவருடைய சகாக்களாகிய சிலருடைய நோக்கமும் இப்போது விளக்கமாகத் தெரிந்துவிட்டது. முதலிலிருந்து அவர்கள் யாரால் தூண்டப்பட்டு வேலை செய்கிறார்கள் என்பதைப்பற்றி யாதொரு சந்தேகமும் கிடையாது. உண்மையில் ரஷீத் அலி அச்சு அரசுகளோடு நட்புகொண்டார் என்பதைப்பற்றி இரண்டொரு இடங்களில் சந்தேகம் இருந்தது. தான் புரட்சிசெய்து அரசாங்கத்தைக் கைப்பற்றிய நாளிலிருந்து ரஷீத் அலி செய்த ஒவ்வொரு காரியமும் ஜெர்மனியோடு கலந்து செய்திருக்கிறார் என்று நன்றாகத் தெரிகிறது. நெருங்கிய கிழங்கரத்திலுள்ள முஸ்லீம் நாடுகளையும், பிரிட்டன், இந்தியா ஆகிய நேச நாடுகளையும் அச்சு அரசுகளுக்குக் காட்டிக்கொடுக்கும் ஒரே நோக்கத்துடன் ரஷீத் அலி வேலைசெய்தார் என்பதற்கு மறுக்கமுடியாத ஆதாரங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கையிலும், இந்திய அரசாங்கத்தார் கையிலும் இருக்கின்றன.

இராக்கில் சட்டபூர்வமாக இருந்த அரசாட்சியைக் கவிழ்த்து பலாத்காரத்தினால் அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்ட ரஷீத் அலி அச்சு நாடுகளின் யோசனையின் பேரில்தான் அம்மாதிரி செய்தார்; அவருக்குப் பண உதவியும் அச்சு நாடுகள் கொடுத்திருக்கின்றன. ரஷீத் அலி செய்த ஒவ்வொரு காரியமும், எதிரிகளுக்கு உதவி செய்வதாயிருந்தது. எதிரிகளின் துருப்புகள் வருவதற்கு அதிக காலமானதால், அதற்குத் தகுந்தாற்போல் ரஷீத் அலி கால தாமதம் செய்து வந்தார். இந்தியாவின் வாயிற்படிக்கருகிலும், துருக்கியின் பின்புறத்திலும், அரேபியாவின் முக்கிய பாகத்திலும் எதிரிகள் ஒரு ராணுவ அடிப்படைத்தளம் ஏற்படுத்துவதற்கு ரஷீத் அலி உதவி செய்ய முயற்சித்தார். இந்தியா அதிவேகமாக எதிர் முயற்சி செய்ததினால், இந்த சதியாலோசனை ஆரம்பத்திலேயே அழிக்கப்பட்டது.

இராக்கின் மூலமாக, முன்பு ஒப்புக்கொள்ளப்பட்ட போக்கு வரத்து சாதனங்களைத் திறப்பதற்காக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் பஸ்ராவில் இறங்கியிருக்கலாம் என்பது ஆங்கிலோ-இராக்கின் ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனை. அதன்படி பிரிட்டிஷ் துருப்புகள் வந்திறங்கும்போது, அவைகளைத் தடுக்கும் நோக்கத்துடன் ரஷீத் அலி இராக்கியத் துருப்புகளை அனுப்பினார். ஆனால், கடைசி நேரத்தில், ஒப்பந்தத்தை உடைத்து பிரிட்டிஷ் துருப்புகளைத் தாக்க நினைத்த எண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லை. ஏனென்றால், ரஷீத் அலியின் அச்சு நண்பர்களின உதவித் துருப்புகள் அதற்குள் வந்து சேரவில்லை. ஆகையால், யாதொரு சம்பவமுமில்லாமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் பஸ்ராவில் இறங்குவதற்கு அனுமதிக்கப்பட்டன. ஆனால் பஸ்ரா ஜில்லாவில், இராக் துருப்புகள் மறியல் செய்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளைப் பகிஷ்காரம் செய்தன.

## ஹப்பானியா விமானச்சாலை.

ஆங்கிலோ-இராக் ஒப்பந்தத்தைப் பிரயோசனமில்லாமல் செய்துவிடுவதே ரஷீத் அலியின் அடுத்த ஏற்பாடு. போக்கு வரத்து சாதனங்களை உபயோகமில்லாமல் செய்துவிட்டு, ஏகாதிபத்தியத் துருப்புகள் வந்த காரியத்தைக் கெடுக்கவேண்டும் என்று வேண்டுமென்றே அவர் சில காரியங்களைச் செய்தார். எண்ணெக் குழாய் செல்லும் பாதையில் பல இடங்களில் இராக்கியத் துருப்புகள் நிறுத்தப்பட்டன; ஹப்பானியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆகாய விமானச் சாலையை இராக் துருப்புகள் சூழ்ந்துகொண்டன. (ஹப்பானியா விமானச்சாலை ஒப்பந்தத்தில் பிரத்தியேகமான ஏற்பாட்டின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.) பிரிட்டிஷ் துருப்புகள் இந்த நெருக்கடியான நிலைமையில் என்ன செய்வதென்று தெரியாமல் சும்மாயிருக்கும்; அதற்குள் அச்சுத் துருப்புகள் உதவிக்கு வந்துவிடும் என்று ரஷீத் அலி நினைத்திருக்கலாம். ஆனால் அது தவறென்று பிரிட்டிஷ் துருப்புகள் நன்றாகக் காண்பித்துவிட்டன. அவைகளைத் தனிப்படுத்தி ஒதுக்கச் செய்த முயற்சி பயன்படவில்லை. சமாதானமான முறையில், இராக் துருப்புகளை விமானச்சாலையை விட்டு விலகிப்போகும்படி பிரிட்டிஷார் கேட்டார்கள். அது பிரயோசனமில்லாமற்போகவே, தங்களுடைய போக்குவரத்து சாதனங்களைப் பெறுவதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை பிரிட்டிஷ் துருப்புகள் செய்து, ரஷீத் அலியின் சூழ்ச்சியினைப் பாழாக்கிவிட்டன.

இதற்கிடையில், ரஷீத் அலியும், அவருடைய சதியாலோசனைக் கூட்டாளிகளும் ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும், உதவியனுப்பும்படி வேண்டுகோள் மேல் வேண்டுகோள் அனுப்பிக்கொண்டே இருந்தார்கள். உதவி வரவில்லை. இராக் மக்களுடைய ஆதரவும் ரஷீத் அலிக்குக் கிடைக்கவில்லை. துருப்புகளுடைய உதவி மாத்திரம் ரஷீத் அலிக்குப் பிரயோசனப்படவில்லை. இந்த நிலைமையில, பாக்தாத்திலிருந்த ரஷீத் அலியின் கூட்டாளிகள் யாருக்கும் சொல்லாமல் சிரியாவுக்கு ஓடிவிட்டார்கள். பாக்தாத்தில், விலைவாசிகள் அதிகமாக உயர்ந்துவிட்டன; மக்களிடம் அமைதியின்மை

அதிகப்பட்டது. ரஷீத் அலியின் கூட்டத்திற்கு பயம் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் சிரியாவின் மூலமாக ஆகாய விமானங்களின் உதவியினுல், அச்சு உதவி வந்து சேர்ந்தது.

### மறுத்த நிபந்தனை.

இப்போது இராக் நிலைமை விளக்கமாகத் தெரிந்து விட்டது. ஜெர்மனியும், இத்தாலியும், ரஷீத் அலி, ரஷீத் அலியைச்சேர்ந்த இதர துரோகிகள், இவர்களின் மூலமாக, அராபிய தேசங்களில் பிரவசிப்பதா அல்லது, இராக்கின் நியாயமான அரசாங்கத்தின் மூலம், இராக்கையும், இதர முஸ்லீம் நாடுகளையும், ஜெர்மனியின் படையெடுப்பிலிருந்து தப்புவிப்பதா ? இதுதான் இப்போதுள்ள நிலைமை. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இது விஷயமாக ஒரு சமாதான ஏற்பாட்டை விரும்பினுர்கள். ரஷீத் அலியின் துரோகம் அவர்களுக்குத்தெரியும் ; ஆங்கிலோ—இராக் ஒப்பந்தத்தை ஒத்துக்கொண்டவர்போல் பாசாங்கு செய்து, அந்த ஒப்பந்தத்தை அடியோடு ஒழிப்பதற்காக அச்சு அரசுகளின் உதவியை அவர் நாடிக்கொண்டிருந்ததும் அவர்களுக்குத் தெரியும் ; அப்படியிருந்தும், மற்ற முஸ்லீம் நாடுகள் மத்தியஸ்தம் பேச விரும்பியதை ஒத்துக்கொண்டு சமாதானம் பேசுவதற்கு அவர்கள் சம்மதித்தார்கள். ஆனுல் ஒரு நிபந்தனை மாத்திரம் கேட்டார்கள். அதாவது, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு விரோதமாக இராக்கியத் துருப்புகள் அணிவகுத்து நிற்பதை நீக்கிவிடவேண்டுமென்றுர்கள். இதற்கு ரஷீத் அலி ஒப்பவில்லை. ஜெர்மனியத் துருப்புகள் சீக்கிரம் வந்துவிடும் ; ஆகையால் சமாதானப்பேச்சு மத்தியஸ்தம் அவசியமில்லை என்று நினைத்து பிரிட்டிஷார் கேட்டதை அவர் மறுத்துவிட்டார். ஆனுல் அவருடைய முயற்சி ஒன்றும் கைகூடவில்லை.

## ரஷீத் அலியின் வீழ்ச்சி.

**கலகக்காரர்களின் ஓட்டம்,**

இராக்கிலிருந்து சந்தோஷமான சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. ரஷீத் அலியின் புரட்சி உடைந்து விழுந்துவிட்டது. ரஷீத் அலி பாக்தாத்துக்கு ஓடிவிட்டார். தன்னுடைய பாதுகாப்பு மந்திரியான, ஷவுகத் இருக்கும் துருக்கிக்காவது போய்க் கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்கலாமென்று மோசூலுக்கு போக நினைத்திருக்கிருரென்று தெரிகிறது. இதர சதியாலோசனைக்காரர்கள் இரானுக்கு ஓடி விட்டார்களென்று சொல்லப்படுகிறது

ரஷீத் அலிக்கு ஜெர்மனி அனுப்பிக்கொண்டிருந்த உதவி குறைந்துகொண்டே வருகிறது. சிரியாவைத் தாண்டி இப்போது வரும் ஜெர்மன் விமானங்கள் முன்பு வந்ததைவிட மிகக் குறைந்துவிட்டன. ரஷீத் அலியின் முயற்சி, சரியான காலத்திற்கு முன்பு செய்யப்பட்டதால், பயனில்லாமற் போய் விட்டதென்று அங்காராவிலுள்ள ஜெர்மானியர்கள் கூறுகிருர்கள். கிரீட், சைப்ரஸ், என்ற தீவுகளை ஜெர்மனி பிடித்ததன் பிறகுதான் இராக்கில் கலகம் நடக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது என்று அவர்கள் கூறுகிருர்கள். கீரீட்டையும், சைப்ரசையும் பிடிப்பது இன்னும் வெகுதூரத்திலிருக்கிறது !

இது இப்படி இருக்க, பிரிட்டிஷ் துருப்புகளும், இந்திய துருப்புகளும், ஏகாதிபத்தியத்துருப்புகளும், இராக்கில் பாக்தாத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. பலூஜாவில் எதிரிகள் தாக்கியதைத் தடுத்து, அவர்களை நமது துருப்புகள் விரட்டியடித்துவிட்டன. யூப்ரடீஸ் நதியின் மேல் பாகத்திலுள்ள அணைகளெல்லாம் பிரிட்டிஷ் துருப்புகள் கையில் இருக்கின்றன. எப்போது வேண்டுமென்றாலும், எதிரிகளுக்கு விரோதமாக, அணைகளைத்திறந்துவிட்டு, நாடு முழுவதும் வெள்ளக்காடாக ஆக்கிவிடலாம். பிரிட்டிஷ் மோட்டார் படைகள், யூப்ரடீஸ் நதியைத் தாண்டி, அதன் கிழக்குபாகத்தில் பாக்தாத்துக்குப் பின்புறத்தில் வேலை செய்துகொண்டு வருகின்றன. பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையும் சும்மாயில்லை ; மோசூலில் இருக்கும் விமானத்தளத்தில் தன் முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டு வருகிறது.

எமீர் அப்துல் இல்லா என்ற சட்ட பூர்வமான அரசாங்கத்தலைவர் இராக்குக்குத் திரும்பி வந்துவிட்டார். பழைய சதியாலோசனைக்காரர்களை விரட்டிவிட்டு, ஒரு புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தி, முன்போல பிரிட்டிஷாருடன் நேசப்பான்மையான தொடர்பு ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. கலகக்காரர்களுக்கு விரோதமாகப் புரட்சி செய்து அவர்களை விரட்டிவிடும்படி, எமீர் அப்துல் இல்லா, இராக் மக்களுக்கு ஒரு அறிக்கை விட்டிருக்கிருர். கூடிய சீக்கிரம் இராக் மக்கள் அப்படியே செய்யப் போகிருர்கள்.

## அபிசீனியா யுத்த முடிவு.

அபிசீனியாவில் இத்தாலியர்களுடைய எதிர்ப்பின் கடைசி அறிகுறிகளை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் துடைத்துக்கொண்டு வருகின்றன. எரிப் பிரதேசங்களிலிருந்து இத்தாலியர்கள் துரத்தப்பட்டார்கள் ; கேலப் என்ற இடம் பிடிக்கப்பட்டது ; 800 இத்தாலியர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டார்கள். சோடு என்ற இடத்தில், நான்கு இத்தாலியப்படைகள் அழிக்கப்பட்டன ; ஆயிரக்கணக்கான இத்தாலியர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஜெனரல் விபராட்டி, ஜெனரல் பக்காரி, என்ற இரு இத்தாலிய தளகர்த்தர்களும் பிடிக்கப்பட்டார்கள். அபிசீனியச்சுதேசித்துருப்புகள், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களின் தலைமையின் கீழ், மாக்தாலா பிரதேசத்தில் 800 இத்தாலியர்களைக் கைது செய்தன. அபிசீனியத்துருப்புகளும், சூடானிஸ் துருப்புகளும், 570 இத்தாலியர்கள், 5,000 இத்தாலியின் குடியேற்ற நாட்டுத்துருப்புகள், 300 பண்டா துருப்புகள், இவைகளைக் கைது செய்தன. 7 பீரங்கிகளும், 170 யந்திர பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன. இத்தாலியின் தளகர்த்தர், அயோஸ்டா பிரபு, சரணுகதியடைந்தது இத்தாலியர்கள் மனத்தில் அதைரியத்தையும், பீதியையும் உண்டாக்கியிருக்கிறது. கூடிய சீக்கிரம் அபிசீனியாவில் ஒரு இத்தாலிய சிப்பாய் கூட இல்லாமல் எல்லா இத்தாலியர்களும் அப்புறப்படுத்தப்படுவார்கள்.

## பிரான்சு அடிமை நாடாய் விட்டது.

லவால் என்ற பிரெஞ்சு துரோகி சமீபத்தில் செய்த 'ரேடியோ' பிரசங்கத்திலிருந்து, பிரான்சு ஜெர்மனியின் அடிமை நாடாய் விட்டதென்ற விஷயம் விளக்கமாகத்தெரிகிறது. மார்ஷல் பீத்தானும், அட்மிரல் தார்லானும், ஜெர்மனியின் உத்தரவுபடி நடப்பவர்களாய் விட்டார்கள். அட்மிரல் தார்லானுடைய நோக்கம், ஆப்பிரிக்காவில் பூமத்தியரேகைப் பிரதேசத்திலுள்ள சுதந்தர பிரெஞ்சு ஆட்சியின் கீழுள்ள நாடுகளைக் கைப்பற்றவேண்டுமென்பது. ஆனுல் சுதந்தர பிரெஞ்சுத்துருப்புகளின் தலைவர் ஜெனரல் டிகால் இதற்கு ஒருகாலும் இடம் கொடுக்கமாட்டார். விஷி அரசாங்கத்தார் ஹிட்லரின் பொம்மைகள் என்று ஜெனரல் டிகால் கூறியிருக்கிருர். சிரியாவில் சில பிரெஞ்சுத்துருப்புகளும், கர்னல் கோலட் என்ற பிரெஞ்சு தளகர்த்தரும் பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டார்கள். பிரான்சு தேசத்து மக்கள் பீத்தான் அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை என்று தெரிகிறது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.